**செ.வெ.எண்: 73** **நாள்: 25.11.2016**

# புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வேளாண்மைத்துறையின் சார்பில் இன்று (25.11.2016) நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்று துவக்கிவைத்து பேசியதாவது:-

விவசாயிகள் குறைகளை மனுக்களாக பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தீர்வுகாண விவசாயிகள் குறைதீர்க்கும் பிரதி மாதம் நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் புஞ்சை நிலங்களுக்கு பயிர்க்காப்பீடு திட்டத்தை விரிவுபடுத்த கோரியும், பம்புசெட்டிற்கு டீசல் மானியம் வழங்கக்கோரியும், மானிய விலையில் உழவு இயந்திரம் மற்றும் தார்ப்பாய் வழங்க கோரியும், பயிர்க்கடன் வழங்க கோரியும் என வரப்பெற்ற 36 மனுக்கள் மீது விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் மழையளவைப் பொறுத்த அளவில் நவம்பர் 2016ம் மாதத்தில் இயல்பான மழையளவான 222.7 மி.மீக்கு, இதுவரை பெறப்பட்ட மழையளவு 23.0 மி.மீ ஆகும். நடப்பு 2016 ஆண்டுக்கு இம்மாதம் வரை பெறப்பட வேண்டிய இயல்பான மழையளவான 829.41மி.மீக்கு இதுவரையில் பெறப்பட்ட மழையளவு 357.64 மி.மீ ஆகும்.

நடப்பாண்டு நெல் 42755 எக்டர் பரப்பளவிலும், சிறுதானியங்கள் 2095 எக்டர் பரப்பளவிலும், பயறுவகை பயிர்கள் 1950 எக்டர் பரப்பளவிலும், எண்ணெய்வித்துப் பயிர்கள் 3856 எக்டர் பரப்பளவிலும், கரும்பு 2923 எக்டர் பரப்பளவிலும், தென்னை 9362 எக்டர் பரப்பளவிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள 33 வேளாண்மை விரிவாக்க மையங்களில் 260.610 மெ.டன் நெல் விதைகளும், 18.400 மெ.டன் பயறு விதைகளும், நிலக்கடலை 10.120 மெ.டன் தற்சமயம் இருப்பில் உள்ளது. விவசாயிகள் தரமான சான்று பெற்ற விதைகளை வேளாண்மை விரிவாக்க மையங்களிலிருந்து பெற்று சாகுபடி செய்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. உரிமம் பெற்ற கூட்டுறவு மற்றும் தனியார் விற்பனை மையங்களிலும் சான்று பெற்ற விதைகள் கிடைக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு தேவையான தரமான உரங்கள் தடையின்றி உரிய நேரத்தில் கிடைக்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்பொழுது யூரியா 4596 மெ.டன்னும், டிஏபி 1242 மெ.டன்னும், பொட்டாஷ் 1016 மெ.டன்னும், 1673 மெ.டன் காம்ப்ளக்ஸ் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டு கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்து வரப்படுகிறது.

சம்பா தொகுப்புத்திட்டம்: மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 18.08.2016 அன்று சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ் காவிரி டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு சம்பா தொகுப்புத்திட்டம் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. புதுக்கோட்டை மாவட்டத்தில் சம்பா தொகுப்புத்திட்டம் காவிரி டெல்டா பகுதிகளான அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி, கறம்பக்குடி, கந்தர்வக்கோட்டை மற்றும் திருவரங்குளம் வட்டாரங்களில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் உழவு 16000 ஏக்கர் பரப்பளவிலும், விதை வழங்கல் 200 மெட்ரிக் டன் அளவிலும், திட்ட சாதனை முழுமையாக அடையப்பட்டு விவசாயிகளுக்கு உழவு மானியம் மற்றும் இயந்திர நேரடி நெல் விதைப்பு மானியமும் தொடர்புடைய வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. களைக்கொல்லி விநியோகம் 12500 ஏக்கர் பரப்பளவில் துத்தநாக சல்பேட் வினியோகம் 3000 ஏக்கர் பரப்பளவிலும், இயந்திரம் மூலம் நெல் நடவு மானியம் 100 ஏக்கர் பரப்பளவிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மானிய விலையில் விதைகள் விநியோகம்: தேசிய உணவு பாதுகாப்பு திட்டம் (அரிசி) திட்டத்தின் கீழ் 10 வருடங்களுக்குள் வெளியிடப்பட்ட நெல் ரகங்களான ஆடுதுறை 49, கோ 49, கோ(ஆர்) 50, கோ(ஆர்) 51, என்.எல்.ஆர்.34449 மற்றும் அண்ணா-4 விதைகளுக்கு கிலோவிற்கு ரூ.10/- மானியம் வழங்கப்படுகிறது. தேசிய உணவு பாதுகாப்புத்திட்டம் (பயறு) திட்டத்தின் கீழ் 15 வருடங்களுக்குள் வெளியிடப்பட்ட உளுந்து ரகங்களான வம்பன் 4, வம்பன் 5, வம்பன் 6, துவரையில் கோ-7 ரகத்திற்கும் மற்றும் தட்டைபயரில் கோ-7 ரக விதைகளுக்கும் கிலோவிற்கு ரூ.25/- மானியம் வழங்கப்படுகிறது. எண்ணெய் வித்து பெருக்கத் திட்டத்தில் 15 வருடங்களுக்குள் வெளியிடப்பட்ட நிலக்கடலை ரகங்களான டி.எம்.வி.13, கோ-4, கே-6 மற்றும் டிஏஜி-24 விதைகளுக்கு கிலோவிற்கு ரூ.25/- மானியம் வழங்கப்படுகிறது. தேசிய வேளாண் வளர்ச்சி (சிறுதானியம்) திட்டத்தின் கீழ் 10 வருடங்களுக்குள் வெளியிடப்பட்ட சிறுதானிய ரக விதைகளுக்கு கிலோவிற்கு ரூ.15/- மானியம் வழங்கப்படுகிறது.

மாற்றுப்பயிர் திட்டத்தின் மூலம் மாவட்டத்தில் வடகிழக்குப் பருவமழை இயல்பைவிடக் குறைவாகவே பெய்து வருவதால் விவசாயிகள் குறைந்த வயது மற்றும் குறைந்த நீர்த்தேவையுள்ள உளுந்து மற்றும் மக்காச்சோளப் பயிர்களை மாற்றுப் பயிர்களாக அதிகளவில் சாகுபடி செய்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத்திட்டத்தின் மூலம் நடப்பு 2016-ம் ஆண்டு சம்பா நெற்பயிருக்கு பிரிமியம் செலுத்துவதற்கான காலக்கெடு 30.11.2016 அன்றுடன் முடிவடைகிறது. சம்பா நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகளை 100 சதவீதம் பயிர்க்காப்பீட்டுத்திட்டத்தில் இணைத்திட தமிழக அரசால் வழிகாட்டுதல் வழங்கப்பட்டுள்ளது. ஆகவே, சம்பா நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் அனைவரும் ஏக்கர் ஒன்றுக்கு ரூ.345/- தவணைத் தொகை (பிரிமியம்) செலுத்தி உடன் காப்பீட்டுத்திட்டத்தில் பயன்பெறக் கேட்டுக்கொள்ளப்படுகிறது. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் நடப்பாண்டு பயிர்க்கடன் மற்றும் விவசாய நகைக் கடன் பெற்று பயிர்க்காப்பீட்டுத்திட்டத்தில் பதிவு செய்யாத விவசாயிகள் தற்சமயம் சம்பந்தப்பட்ட வங்கிக்கிளைகளை அணுகி நிலம் தொடர்பான ஆவணங்களைச் (சிட்டா, அடங்கல், கிராம நிர்வாக அலுவலர் சான்று) சமர்ப்பித்து திட்டத்தில் சேர்ந்து பயன்பெற மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் வங்கிவாரியாக அலுவலர்கள் வாரியாக பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும் கடன் பெறும் விவசாயிகள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் பயிர்க்காப்பீட்டுத் தவணைத் தொகை செலுத்திடவும், கடன் பெறா விவசாயிகள் மேற்கண்ட வங்கிகளில் செலுத்த இயலாத நிலையில் வேளாண்துறை மற்றும் காப்பீட்டு நிறுவனம் இணைந்து நடத்தும் பதிவு மையங்களில் பதிவு செய்து கொள்ள விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தேசிய நீடித்த நிலையான வேளாண்மை இயக்கத்தின் கீழ் மண்வள அட்டை இயக்கத்திட்டத்தில் 22692 மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு அதில் 18240 மண்மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு அதன் முடிவுகள் வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு இதுவரை 64530 விவசாயிகளுக்கு மண்வள அட்டை தயார் செய்து வழங்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் மண்வள அட்டையில் தரப்பட்டுள்ள உர அளவுப் பரிந்துரைப்படி உரமிட்டுப் பயனடைய கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

முன்னதாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டரங்கில் வனத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த நுண்உயிர் மற்றும் உயிர் உரங்கள் விற்பனை மையத்தினை பார்வையிட்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, வேளாண்மை இணை இயக்குநர் திரு.அண்ணாமலை மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**